# சோ. தர்மன் சூல் நாவலில் கொப்புளாயி

**ச. பாண்டியம்மாள்**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**

**தியாகராசர் கல்லூரி, மதுரை – 09.**

periyasamypandiyammal@gmail.com

**ஆய்வின் சுருக்கம்**

பெண்கள் சமூகத்திலும், குடும்பத்திலும் ஏதாவது ஒரு நபரைச் சார்ந்து வாழக்கூடியவர்களாகத் திகழ்கின்றனர். சூல் நாவலில் கொப்புளாயி என்ற பெண் திருமணம் முடிந்த பின்பு குழந்தையில்லாத காரணத்தினால் கணவனுக்குத் தங்கையை மணம் முடித்து வைத்தும், மாடுகளை வளர்த்தும், நந்தவனம் அமைத்தும், கிணறு வெட்டியும், குழந்தையை வளர்த்தும், தன் வாழ்வை நகர்த்துகிறாள். அவளது செயல்கள் மூலம் சமூகத்தில் வெளிப்படும் அவளின் மதிப்பையும், அறச் சிந்தனையையும் நல்ல குணங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக உருப்பெற்றது நாவல் இலக்கியமாகும். எந்தவொரு புனைக்கதையும் சிறந்த கதைக் கருவாலும் மொழி நடையாலும் சிறப்புற அமைத்துக் காட்டப்படலாம். ஆயினும் அப்புனைகதையின் முழுமைக்கும் வெற்றிக்கும் அவ்வாசிரியன் கையாண்டுள்ள கதாப்பாத்திரங்கள் அடிப்படைக் காரணங்களாய் அமைகின்றன. ஒரு படைப்பாளி தான் கூற விழையும் பல அரிய கருத்துக்களைப் பாத்திரங்களின் வழி

வெளிப்படுத்துவது சிறப்பானதாகும். இவ்வகையில் அமையும் புதினமானது மக்களால் வரவேற்கப்பட்டு உயர்ந்த நிலையை அடையும். அவ்வகையில் சோ.தர்மன் எழுதிய சூல் என்னும் நாவலில் இடம்பெறும் பெண் கதாபாத்திரமான கொப்புளாயியின் பாத்திரப் படைப்பை ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**கொப்புளாயின் குடும்ப வாழ்க்கை**

உலக வாழ்க்கையில் ஒருவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியையும், பெருமைகளையும் தரத்தக்கது இல்லற வாழ்க்கை ஆகும். **“நல்ல மனைவி, நல்லமக்கள், நல்லசெல்வம், நல்ல பண்பாடு ஆகியவை ஒருங்கே அமைந்து விட்டால் அம்மகிழ்ச்சி இன்னும் பல மடங்காகும்.”**[1] வள்ளுவரும் வாழ்வியலும் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்தம்மாள் கொப்புளாயி என்று அழைக்கப்படுகிறாள். எட்டயபுரம் சமஸ்தான எல்லைக்குள் பெருங்கொண்ட சம்சாரிகளில் கோழிமடத்தான் பெருமாள் குடும்பன் பேர் அத்துப்படிந்தப் பெருமாளுக்கு வாக்கப்பட்டு வந்தவள் தான் சித்தம்மாள் இவளுக்கு எட்டு வருடமாக குழந்தை பாக்கியமில்லாததால் தன் உடன்பிறந்த சோலையம்மாளையும் இரண்டாந்தாரமாகக் கட்டிவைத்ததன் மூலம் தன் வம்சாவழியை தழைக்கச் செய்தாள். (சூல் நாவல் ப. 116) அவளின் நல்ல எண்ணமும், குடும்பம் வளர்ச்சி அடைந்ததைப் பார்த்து மகிழ்ச்சியுறும் குணமும் வெளிப்படுகிறது. எத்தனை தியாகம் செய்தாலும் கணவனை யாரும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆனால் வாழ்க்கையே விட்டுக் கொடுத்ததன் மூலம் அவளின் உயர்ந்த குணம் வெளிப்படுகிறது.

**கொப்புளாயி எருமை மாடுகளுடன் பழகுவது**

எருமை அல்லது நீர் எருமை என்ற விலங்கு, பாலூட்டிகளில் ஒன்றாகும். இவற்றிக்கிடையே பேரின, சிற்றின வேறுபாடுகள் உண்டு. இருப்பினும் எருமை என்ற சொல் பொதுவாக வீடுகளில் வளர்க்கப்படும் எருமையையே குறிக்கிறது. இந்த

எருமையின் தாயகம் இந்தியா என பெரும்பான்மையான பரிணாம மரபியல் ஆய்வுகள் கூறுகின்றன. **“உலகம் முழுக்க பசுக்கலே சுமார் 900 வகைகள் உள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை பசுக்களை மனிதர்கள் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கிறாங்கன்னு”**[2] எல்லாருக்கும் தெரியும். கொப்புளாயி தன் உடன் பிறந்தாளுக்கு குழந்தைகள் பிறந்து பெருமாளுக்கு வாரிசு பெருக வளர்ப்பில் எருமைகளைப் பெருக்கிக் கொண்டிருந்தாள் கொப்புளாயி. தூரத்தில் வரும் போதே மாட்டின் கொச்சை கவுச்சியும், பால், தயிர் மோரின் கவுச்சி வாடையும் மொச்சென்று மூக்கினுள் நுழைந்து நாசியை நிறைக்கும் (சூல் நாவல் ப. 116) அவள் எருமைகளோடு கொண்ட தொடர்பு வெளிப்படுகிறது. குடும்ப வாழ்க்கையை விடுத்து மாடுகளை வளர்த்ததோடு மட்டுமில்லாமல் எல்லாருக்கும் பால், தயிர், மோர் என கொடுக்க ஆரம்பித்ததன் மூலம் அவளின் தரம் உயர்வதும் இந்நாவலில் வெளிப்படுகிறது.

**கொப்புளாயி உரையாடுதல்**

உரையாடல் என்பது ஒருவர் மற்றவருடன் கலந்து பேசிக் கொள்வதைக் குறிக்கும். உரையாடலின் போது ஒருவருக்கொருவர் பேசி, கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். **“பண்டைய நாளில் தனிச்சிறப்புடனும் தனிப்பெருமையுடனும் பேச்சு சாதுரியத்தைப் போற்றி வளர்த்து வந்தவர்கள் தமிழர்கள் பேச்சு சாதுரியத்திலே நலத்தையும் நாகரிகத்தையும் ஏற்றி வைத்து மெருகும், உணர்வும் கொடுத்தவர்கள் தமிழர்கள். புற வாழ்க்கையிலும், அக வாழ்க்கையிலும் பேச்சின் ஆற்றலை, பேச்சின் சாதுரியத்தை, பேச்சுக் கலையை ஒரு நாகரிகப் பண்பாகக் கையாண்டு வந்தவர்கள் தமிழர்கள். குறிப்பு அறிந்து பேசுவதும் சிலேடையாகப் பேசுவதும், பொடி வைத்துப் பேசுவதும் நாம் வளர்த்த பேச்சு கலையிலே காணப்படும் சிறப்பியல்புகளாகும்.”**[3] கொப்புளாயி மனிதர்களிடம் பேசுவதைக் காட்டிலும் மாடுகளுடன் உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். (சூல் நாவல் ப.116) வளர்ந்த காதுகளில்

பாம்படம்தொங்க எருமை மாடுகளுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். கொப்புளாயி உரையாடுவதற்கு மாடுகள் தவிர்த்து வேறொன்றுமல்லை. மனிதர்களுடன் பேசுவதற்கு இந்தக் காலத்தில் நேரமில்லை. நாவலில் கொப்புளாயி மாடுகளை நேசிக்கவும், அதோடு பழகுவதும், உரையாடுவதும் என வாழ்வை நகர்த்துவது அவளது எதிர்பார்ப்பற்ற வாழ்வை வெளிப்படுத்துகிறது. **குழந்தை இல்லாமல் இருத்தல்**

உலகத்தில் மக்கட்பேறானது சிறப்பாகக் கருதப்படுகின்றது. மக்கட்பேறு அல்லது வாரிசு என்பது சமுதாயத்தின் பொருளாதிக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் ஒருதார மணம் மக்கட்பேறு அல்லது வாரிசுரிமையால் தோன்றியது. தன்னால் சேர்க்கப்பட்ட அல்லது நிர்வகிக்கப்பட்ட வாரிசுத் தேவை என்பதை உணர்ந்த பிறகுதான் மக்கட்பேற்றினை விரும்பினர். இல்வாழ்வின் முக்கியக் கடமையாக புதல்வரைப் பெறுதல் அமைகிறது. இதனை

**“பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கட்பேறு அல்ல பிற”[4] (குறள். பா. 61)**

எமக்குத் தெரிந்தவரை அறிவை அறிந்து மதிக்கும் மக்களைப் பெற்றிருப்பது பெரும் பேறு. அப்பேற்பட்ட செல்வம் இல்லாமல் கொப்புளாயி தவிக்கும் தவிப்பை இந்நாவலில் உணரமுடிகிறது. இதனை ஒரு பெண்ணிடம் என்ன மாதிரி புள்ள கொல்லி பெறாதவ. என்னைய மாதிரி மலடினு பேரு வாங்கிறக்கூடாது. ஒடம்பு இருந்து என்ன செய்ய, சொத்து சொகம் இருந்து என்ன செய்ய நம்ம பேரு சொல்ல ஒரு புள்ள வேணுமில்ல. எம் புருஷன் மேல ஒரு தப்புமில்ல. நமக்கு லவிச்சது அம்புட்டுத் தான்ட்டு போக வேண்டியது தான் (சூல் நாவல் ப. 117) என்று கொப்புளாயி தனக்கு குழந்தையில்லாமல் சமூகத்தில் பட்ட துன்பங்களையும், தனக்கு கொல்லி போட

குழந்தை இல்லை என்பதையும், கணவன் மீது எந்த குறையும் சொல்லாமல் தன்னையே தாழ்த்திக் கூறுவதன் மூலம் அவளுடைய பிள்ளைப்பேறு பற்றிய எண்ணம் வெளிப்படுகிறது.

**கொப்புளாயி பால் கறத்தல்**

பால் கறத்தல் என்பது சமூகத்தில் ஒரு முக்கியமான வேலை ஆகும். உலகில் உள்ள சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் காபி, டீ, பால் என்று இதன் தேவை இன்றளவும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்தப் பெண்ணிற்கு பால் கறப்பதென்பது அவள் லயித்துச் செய்யும் வேலைகளில் ஒன்று. சுகமாக அசைப்போட்டபடி எருமை நிற்க தன் இரண்டு முட்டுக்களையும் இணைத்து பால் சட்டியை இடுக்கி கவுட்டுக்குள் வைத்துக் கொண்டு, மடுவையும் காம்பையும் மாறிமாறி உருவும் போது ஒரு கை உயர்ந்து, மறுகை தாழ்ந்து தறி நெய்பவளைப் போல் காம்புகளின் விரைப்பு குறையக் குறைய சட்டியில் பால் நுரை ததும்ப நிற்கும் என்பதையும், பால் கறக்கும் போது அவள் தோள்பட்டையில் தொங்கும் பம்படத்தையும், கழுத்தை மேலும் கீழும் ஆட்டுவதையும் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். (சூல் நாவல் ப. 119) ஒரு ஆண் செய்யக் கூடிய வேலையை கொப்புளாயி விரும்பி ஏற்றுக் கொண்டு செய்வது அவளது மனமுவந்து செயலாற்றும் தன்மையை வெளிக்காட்டுகிறது.

**தானம் கொடுத்தல்**

உருளைக்குடி கிரமத்தில் எந்த நேரமும் போய்க் கேட்டாலும் பாலும், மோரும், தயிரும் ஓசியில் கிடைப்பது கொப்புளாயி வீடுதான். அந்தக் காலத்தில் பண்டங்கள் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் பொருளை விலைபேச மாட்டார்கள். **"தனி மனிதரின்**

**பண்புகள் அடுத்தவருடனான அவருடைய உறவுகளைப் பொறுத்து ஒன்று மெருகேறுகிறது அல்லது உருமாறுகிறது."[5]**

இவ்வாறு தான் உயர்ந்த குணாதிசயம் உள்ளவரோடு பழகும் போது அவர்களுள் உங்களுக்கும் இடம் கிடைத்து விடுகிறது. நீங்களும் உயர்ந்து விடுகிறீர்கள். ஒளி வீசத் துவங்கி விடுகிறீர்கள். கொப்புளாயி வீட்டின் முற்றத்தில் போய் நின்றவுடன் பால், மோர் கவுச்சி நச்சென்று மூஞ்சியில் உறைக்கும். கையில் மண்கலயத்துடன் வெளியே எட்டிப் பார்ப்பாள். ஆட்கள் இருக்கிறார்களா இல்லையா என்று. இருக்கிறார்கள் என்றால் கட்டியான தயிரைப் போன்ற மோரைக் கலந்து அனைவருக்கும் கொடுப்பாள். எந்நேரமும் முற்றம் நிறைந்து ஆட்கள் கூடிக்கிடப்பார்கள். எல்லோருக்கும் பால், மோர், தயிர் என்று கொடுப்பதன் மூலம் எல்லாருடைய மனதிலும் நீங்கா இடம் பிடித்திருப்பதையும் அவளுடைய விருந்தோம்பல் பண்பையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**ஊருக்கே தாயானாள்**

கொப்புளாயி தன் குடும்பத்தை இழந்து எந்த பெண்ணும் செய்யத் துணியாத காரியத்தைத் தனியாக நின்று செய்ததாள். தன்னில் புதைந்த காமத்தீயை, விரசத்தை, காமப்பரவசத்தை மறந்தாளா? குழந்தை பெற லாயக்கில்லாத இந்த மலட்டு உடலை உடலின் இம்சையை ஊராரின் அனுதாபத்தை ஏச்சை, எள்ளலை இதன் மூலம் மறந்தாளா? கொப்புளாயின் செயல்கள் நரை விழுந்த முதிர்ச்சியில் அல்ல, நரை விழுந்து முதிராத கன்னியின் செயல்களைச் செய்து கொப்புளாயி ஊருக்கே தாயானாள். எல்லா குழந்தைகளுக்கும் அவ்வையானாள். தன்னிடம் இருக்கும் கவலைகளை மறப்பதற்கு அனைவருக்கும் பால், மோர் கொடுத்து உதவினாள். பின்னர் உணர்ச்சிகளையும் அடக்கி மலட்டு உடல் இம்சையைப் பொறுத்து மாடுகளை கவனிப்பதில் தன்னையே மறந்தாள். (சூல் நாவல் ப. 120) நரை விழுந்த கன்னியாய்

இருந்தாள். ஊருக்கே தாயாகிப் போனாள். அது மட்டும் அல்லாமல் வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் மருக்கொழுந்து சூடி மணக்க மணக்க திரிந்தார்கள். சிறுசுகளின் கையில் வெள்ளிரிப் பிஞ்சுகள். கொப்புளாயி சந்தோஷம் பொங்க மோர் சுமந்தாள். வெள்ளி தோறும் மக்களின் மனங்களில் நிறைந்தாள். வயிறு நிறைய தயிரைப் போன்ற கட்டி மோர் குடித்து கையெடுத்துக் கும்பிடும் ஜனங்கள் அவளைச் சுற்றி இருந்தனர். அந்த அளவிற்கு அன்பையும், அடக்கத்தையும் உடையவளாக அவளது பாத்திரப் படைப்பைக் காணமுடிகிறது.

**கொப்புளாயி நந்தவனம்**

மரம், செடி, கொடி, பூக்கள் என்று எல்லாமே நிறைந்து இருக்கக் கூடிய இடம் தான் நந்தவனம். **“ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே”** என்ற **பழமொழி இவ்வுலகம் படைக்கப்படுவதற்கும் புதிய உயிர்கள் தோன்றுவதற்கும் காரணமாக இருப்பது பெண்கள் தான். பெண்கள் தான் தீயவற்றை அழித்து நன்மை தழைத்தோங்க பாடுபடுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது இந்தப் பழமொழி”**[6] கிணறு வெட்டி ஆழமில்லாத அந்தத் தெலாகிணற்றில் இருக்கங்குடி மாரியாத்தாளும் கொப்புளாயியும் தண்ணீராய் பொங்கி வந்து ஆயிரமாயிரம் மனிதர்களின் வழிப்போக்கர்களின் கால்நடைகளின் தாகம் தீர்த்தார்கள். வெய்யிலுக்கு நிழலானார்கள். மரங்களாகவும் நின்றார்கள். வெகு நாட்களாக வாகை மரத்துத் தோப்பு என்று அழைக்கப்பட்ட இடம் நாளடைவில் கொப்புளாயி நந்தவனம் என்றானது. (சூல் நாவல் ப. 122) சுட்டெரிக்கும் கரிசலின் தகிப்பை, கோடையின் வெம்மையை, கொப்புளாயி நந்தவனம் குளிராய் மாற்றி இளைப்பாறியது என்பதில் மாடுகளை பார்ப்பதோடு மட்டும் அல்லாமல் கொப்புளாயி எல்லோருக்கும் மோர் கொடுத்த பின்பு எல்லாருக்கும் தாயாக நின்றாள். பின்னர் மரங்கள் செடிகள் வைத்தாள். அதற்காக தண்ணீர் வேண்டும் என்று ஒரு கிணறு வெட்டினாள். அதில் இருக்கன்குடி கோவிலுக்குச் செல்லும் நபர்கள் தண்ணீர்,

மோர் குடித்து விட்டு அங்கு வெயிலுக்கு அமர்ந்து விட்டு தான் செல்வார்கள். சுட்டெரிக்கும் வெயில் கரிசலின் தகிப்பை நந்தவனம் குளிராய் மாற்றியது. கொப்புளாயின் செயல்கள் மூலம் சமூகத்தில் அவள் அனைவருக்கும் உதவுவதை தெரிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

இன்றைய சமூகத்தில் பெண்கள் கல்வி அறிவு, வேலைக்குச் செல்லுதல், பொருளாதார மேம்பாடு இவையெல்லாம் பெண்களுக்கு தன்னம்பிக்கையையும் புத்துணர்வையும் கொடுத்திருக்கிறது என்பதை எப்படி மறுக்க முடியாதோ அதே அளவு சமூக சிக்கல்களை அவள் எதிர்கொள்ளவும் வேண்டியிருப்பதை கொப்புளாயி குடும்ப வாழ்க்கையில் இருந்து விலகி, சமூக அமைப்பு போன்றவற்றில் தனித்து வாழக் கூடியவளாகவும், பெண் எதையும் சாதிக்க முடியும் என்பதையும், குழந்தைப்பேறு இல்லாமல் சமூகத்தில் எல்லாரும் மதிக்கத்தக்க பெண்ணாகவும், அன்புடனும், பணிவுடனும், ஆளுமைத் திறத்தை வெளிப்படுத்தியிருக்கிறாள் என்பதை இந்த ஆய்வின் மூலம் அறியலாம்.

**தொகுப்புரை**

1. வாழ்க்கையில் இருந்து விலகி மாடுகளுடன் உரையாடுதல், கவனித்தல், பால்கறத்தல், எல்லாருக்கும் மோர் கொடுத்தல் என்று தனியாக நின்று உழைத்ததைக் காண முடிகிறது. கொப்புளாயி திருமணம் முடிந்த பிறகு குழந்தை இல்லாமல் சமூகத்தில் பட்ட துன்பமும், துயரத்தையும் வாழ்க்கையை தங்கைக்கு விட்டுக் கொடுத்ததையும் நல்ல உள்ளத்தையும் அறியமுடிகிறது.

2. கொப்புளாயி குடும்ப வாழ்க்கை இல்லை என்றாலும் மாடுகளிடமிருந்து பால் கறப்பதில் கெட்டிக்காரி, கறந்த பாலை அனைவருக்கும் தானமாக கொடுப்பதன் மூலம்

அவளிடம் உள்ள அறத்தை வெளிக் கொணரமுடிகிறது. நந்தவனம் அமைத்ததன் மூலமும், கோவிலுக்கு செல்பவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதன் மூலமும் ஊருக்கே தாயானாள். இதன் மூலம் அவளுக்கு சமூகத்தில் நல்ல அங்கீகாரம் கிடைத்திருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தர்மன், சோ., சூல், -2016அடையாளம் பதிப்பகம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தா நத்தம், 621 310. திருச்சி மாவட்டம். இந்தியா. தொலைபேசி. 0433 – 2273444.

2. சுரேஷ், கோ., வள்ளுவரும் வாழ்வியலும்,- 2008 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்., அம்பத்தூர், சென்னை – 600 098. முதற்பதிப்பு – 2008. ப. 100.

3. பதி, ஆர்.வி., பாலூட்டிகள் பற்றிய தகவல் களஞ்சியம்,-2005 ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 40, பிஞ்சால சுப்பிரமணியன் தெரு (உஸ்மான் ரோடு) தியாகராய நகர், சென்னை – 600 017. முதற்பதிப்பு – 2005. ப. 150.

4. ஆச்சார்யா, டி.எஸ்., உயர்வு தரும் உரையாடல் கலை, நர்மதா பதிப்பகம், நல்ல நூல் வெளியீட்டார்கள், 10, நானா தெரு, தி.நகர், சென்னை – 600 017. ப. 5.

5. புலவர் குழந்தை, திருக்குறள் புலவர் குழந்தை உரை,-2007 பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை – 600 108. பதிப்பு – 2007. பா. எண் 63.

6. தேவ்நாத், C.S., வெற்றி தரும் ஆளுமை ஆற்றல்,-2010 நர்மதா பதிப்பகம், நல்ல நூல் வெளியீட்டார்கள், 10, நானா தெரு, தி.நகர், சென்னை – 600 017. ப. 105.

7. லலிதாமதி, இ.எஸ்., பெண் நலம்,-2010சாருப்ரபா பப்ளிகேஷன், ஜானி ஜான் கான் ரோடு, சென்னை – 600 014. பதிப்பு – 2010. ப. 105.